(பத்தாவது பாராளுமன்றம் - முதலாவது கூட்டத்தொடர்)

இல. 1(11).]

# பாராளுமன்றத்தின்
# 1 ஆம் ஒழுங்குப் புத்தகத்துக்கான அனுபந்தம்
## 2025 பெப்ரவரி 22, சனிக்கிழமை வெளியிடப்பட்டது

## 2025 மார்ச் 04, செவ்வாய்க்கிழமை

# பிரேரணை முன்னறிவித்தல்களும் தினப்பணிகளும்

*

பிரதம அமைச்சர் மற்றும் கல்வி, உயர் கல்வி மற்றும் தொழிற் கல்வி அமைச்சர்,— உண்ணாட்டு இறைவரிச் சட்டத்தின் கீழான தீர்மானம்,— 2017 ஆம் ஆண்டின் 24 ஆம் இலக்க உள்நாட்டு இறைவரிச் சட்டத்தின் 75 (1) பிரிவின் கீழ் இரட்டை வரி விதிப்பினை தவிர்ப்பதற்காக மற்றும் வரி செலுத்தாது தட்டிக் கழிப்பதனை தடுப்பது தொடர்பில் 2013 யூலை 26 ஆம் திகதி பாராளுமன்றத்தால் நிறைவேற்றப்பட்டு, 2013 செப்டெம்பர் 17 ஆம் திகதிய இலக்கம் 1828/9 கொண்ட அதிவிஷேட வர்த்தமானப் பத்திரிகையில் பிரசுரிக்கப்பட்ட இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் அரசாங்கத்திற்கும் இந்தியக் குடியரசின் அரசாங்கத்திற்கும் இடையில் செய்துகொள்ளப்பட்ட உடன்படிக்கை திருத்தப்பட்டு, 2024 டிசெம்பர் 16 ஆம் திகதி திகதியன்று செய்துகொள்ளப்பட்டதும் 2025.02.20 ஆம் திகதி சமர்ப்பிக்கப்பட்டதுமான கூட்டிணைந்த பத்திரம் அங்கீகரிக்கப்படுதல் வேண்டுமென இப்பாராளுமன்றம் தீர்மானிக்கிறது.

(அமைச்சரவையின் அங்கீகாரம் பெறப்பட்டுள்ளது.)

*

பிரதம அமைச்சர் மற்றும் கல்வி, உயர் கல்வி மற்றும் தொழிற் கல்வி அமைச்சர்,— காப்புறுதித் தொழிலை ஒழுங்குபடுத்தல் சட்டத்தின் கீழ் ஒழுங்குவிதிகள்,— 2000 ஆம் ஆண்டின் 43 ஆம் இலக்க, காப்புறுதித் தொழிலை ஒழுங்குபடுத்தல் சட்டத்தின் 16 ஆம் பிரிவுடன் வாசிக்கப்பட வேண்டிய 112 ஆம் பிரிவின் கீழ் நிதி, திட்டமிடல் மற்றும் பொருளாதார அபிவிருத்தி அமைச்சரினால் ஆக்கப்பட்டு 2024 டிசம்பர் 22 ஆம் திகதிய 2415/79 ஆம் இலக்க அதிவிசேட வர்த்தமானப் பத்திரிகையில் பிரசுரிக்கப்பட்டதும் 2025.02.22 ஆம் திகதி சமர்ப்பிக்கப்பட்டதுமான ஒழுங்குவிதிகள் அங்கீகரிக்கப்படுமாக.

(அமைச்சரவை அங்கீகாரம் பெறப்பட்டுள்ளது.)

* அரசாங்க அலுவல்களைக் குறிக்கின்றது.

## 2025 மார்ச் 14, வெள்ளிக்கிழமை

# வாய்மூல விடைக்கான வினாக்கள்

126/2024

கௌரவ சட்டத்தரணி தயாசிறி ஜயசேக்கர,— நிதி, திட்டமிடல் மற்றும் பொருளாதார அபிவிருத்தி அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) 2024.01.01 ஆம் திகதி தொடக்கம் 2024.09.21 ஆம் திகதி வரை சர்வதேச நாணய நிதியத்திலிருந்து இலங்கை பெற்றுக்கொண்டுள்ள மொத்தக் கடன் தொகை எவ்வளவென்பதையும்;

(ii) 2024.09.21 ஆம் திகதி தொடக்கம் தற்போது வரை சர்வதேச நாணய நிதியத்திலிருந்து இலங்கை பெற்றுக்கொண்டுள்ள மொத்தக் கடன் தொகை எவ்வளவென்பதையும்;

(iii) மேற்படி (ii) இல் குறிப்பிடப்பட்டுள்ள கடன் தொகை எத்தனை சந்தர்ப்பங்களில் பெற்றுக்கொள்ளப்பட்டுள்ளது என்பதையும்;

(iv) மேற்படி கடன்தொகைகள் பெறப்பட்டதன் நோக்கம் யாதென்பதையும்;

(v) மேற்படி கடன்தொகைகளுக்காக அறவிடப்படும் வட்டி விகிதம் யாதென்பதையும்;

(vi) மேற்படி கடன் தவணைகளை திருப்பிச் செலுத்த ஆரம்பிக்க வேண்டிய திகதி மற்றும் செலுத்தி முடிக்கப்பட வேண்டிய திகதி வெவ்வேறாக யாதென்பதையும்;

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஆ) இன்றேல், ஏன்?

155/2024

கௌரவ அஜித் பி. பெரேரா,— வலு சக்தி அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) இலங்கையில் காற்றாலை மின் சக்தியையும் சூரிய மின் சக்தியையும் அதிகரிப்பதற்காக இந்தியாவின் அதானி நிறுவனத்துடன் அல்லது அதன் துணை நிறுவனத்துடன் இலங்கை அரசாங்கம் உடன்படிக்கை நிறைவேற்றி உள்ளதா என்பதையும்;

(ii) ஆமெனில், மேற்படி உடன்படிக்கையைச் சமர்ப்பிப்பாரா என்பதையும்;

(iii) அவ் உடன்படிக்கையின் அடிப்படை நோக்கங்கள் யாவையென்பதையும்;

(iv) போட்டிநிலை விலைமனுக் கோரலின்றி எந்த அடிப்படையில் மேற்படி நிறுவனத்திற்கு இலங்கையில் மின்சாரத்தை உற்பத்தி செய்வதற்கான வாய்ப்பு வழங்கப்பட்டது என்பதையும்;

(v) இலங்கை மின்சாரச் சட்டத்திற்கு இணங்க "ஓர் அரசாங்கத்திற்கும் மற்றுமொரு அரசாங்கத்திற்கும் இடையில்" (Government to Government) என்ற வரையறைக்குள் மேற்படி கம்பனி உள்ளடங்காது என்பதை ஏற்றுக்கொள்வாரா என்பதையும்;

(vi) மேற்படி உடன்படிக்கை குறித்து அரசாங்கத்தின் கொள்கை யாதென்பதையும்;

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஆ) இன்றேல், ஏன்?

190/2024

கௌரவ நலின் பண்டார ஜயமஹ,— வலுசக்தி அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) மின் கட்டணத்தைத் திருத்துவதாக அரசாங்கம் பல சந்தர்ப்பங்களில் அறிவித்தமை பற்றி அவர் அறிவாரா என்பதையும்;

(ii) இறுதியாக மின் கட்டணம் திருத்தப்பட்ட திகதி யாதென்பதையும்;

(iii) எதிர்காலத்தில் மின் கட்டணம் திருத்தப்படுமாயின், அது தொடர்பிலான விபரங்கள் யாவை என்பதையும்;

(iv) மின் கட்டணத்தை திருத்துவதற்கான முன்மொழிவுகளை சமர்ப்பிப்பதற்கு இலங்கை மின்சார சபை நீண்ட காலத்தை எடுத்துக்கொள்வதாக இலங்கை பொதுப் பயன்பாடுகள் ஆணைக்குழுவினால் தெரிவிக்கப்படுகின்ற கூற்று தொடர்பில் எடுக்கப்படவுள்ள நடவடிக்கைகள் யாவை என்பதையும்;

(v) மின் கட்டணத்தை மேலும் திருத்துவதற்காக எடுக்கப்படும் நடவடிக்கைகள் யாவை என்பதையும்;

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஆ) இன்றேல், ஏன்?

293/2024

கௌரவ சட்டத்தரணி ரஊப் ஹகீம்,— சுகாதாரம் மற்றும் வெகுசன ஊடக அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) 2024 நவம்பர் மாதம் இலங்கையில் பெய்த கடும் மழையினால் ஏற்பட்ட வெள்ளம் காரணமாக கல்முனை, அஷ்ரப் ஞாபகார்த்த வைத்தியசாலையின் சத்திர சிகிச்சைக்கூடம், தீவிர சிகிச்சைப் பிரிவு, நோயாளர் தங்கும் அறைகள், வெளி நோயாளர் பிரிவு, சாய்சாலைகள், மருந்துக் களஞ்சியங்கள் உட்பட வைத்தியசாலை வளாகம் முற்றாக நீரில் மூழ்கியது என்பதையும்;

(ii) அதன் காரணமாக மேற்படி வைத்தியசாலையின் நடவடிக்கைகள் செயலிழந்தன என்பதையும்;

(iii) நோயாளர்களுக்கு சிகிச்சையளிக்கும் வைத்தியசாலை வளாகத்தை மென்மேலும் பாதுகாப்பாக பேணிவர வேண்டும் என்பதையும்;

அவர் ஏற்றுக் கொள்வாரா?

(ஆ) (i) மேற்படி வைத்தியசாலை நீரில் மூழ்கியதன் காரணமாக ஏற்பட்டுள்ள சேதம் மதிப்பீடு செய்யப்பட்டுள்ளதா என்பதையும்;

(ii) ஆமெனில், மேற்படி சேதம் எவ்வளவு என்பதையும்;

(iii) மேற்படி சேதத்தை வழமைக்குக் கொண்டு வருவதற்காக மேற்கொள்ளப்படும் நடவடிக்கைகள் யாவை என்பதையும்;

(iv) எதிர்காலத்தில் அவ்வாறான நிலைமை ஏற்படாதிருப்பதற்கு மற்றும் வைத்தியசாலை வளாகத்தை மென்மேலும் பாதுகாப்பாக பேணிவருவதற்கு மேற்கொள்ளப்படும் நடவடிக்கைகள் யாவை என்பதையும்;

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(இ) இன்றேல், ஏன்?

302/2024

கௌரவ ரவி கருணாநாயக்க,— பிரதம அமைச்சர் மற்றும் கல்வி, உயர் கல்வி மற்றும் தொழிற் கல்வி அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) வருடாந்தம் அரசாங்க மற்றும் தனியார் பாடசாலைகளில் முதலாம் வகுப்பிற்கு அனுமதிக்கப்படும் மாணவர்களின் எண்ணிக்கை யாதென்பதையும்;

(ii) மேலே குறிப்பிடப்பட்ட (i) இக்கு அமைவாக கடந்த ஐந்து ஆண்டுகளில் அனுமதிக்கப்பட்ட மாணவர்களின் எண்ணிக்கை யாதென்பதையும்;

(iii) கடந்த மூன்று ஆண்டுகளில் க.பொ.த (சா/த) மற்றும் க.பொ.த (உ/த) பரீட்சைகளுக்குத் தோற்றிய மற்றும் சித்தியடைந்த பாடசாலை மற்றும் தனிப்பட்ட பரீட்சார்த்திகளின் எண்ணிக்கை யாதென்பதையும்;

(iv) மேலே குறிப்பிடப்பட்ட க.பொ.த (உ/த) பரீட்சார்த்திகளில் சித்தியடைந்து அரசாங்கப் பல்கலைக்கழகங்களுக்கு தகுதிபெற்று அனுமதி கிடைக்கப்பெற்ற மாணவர்களின் எண்ணிக்கை யாதென்பதையும்;

அவர் இச்சபைக்கு வெவ்வேறாக அறிவிப்பாரா?

(ஆ) (i) பல்கலைக்கழக அனுமதிக்காக தகுதிபெற்றிருந்தும் பல்கலைக்கழகங்களுக்குள் அனுமதி கிடைக்கப்பெறாத மாணவர்களுக்காக எடுக்கப்பட்ட நடவடிக்கைகள் யாதென்பதையும்;

(ii) இலங்கையிலுள்ள தனியார் பல்கலைக்கழகங்களில் பதிவுசெய்துகொண்ட அத்தகைய மாணவர்களின் எண்ணிக்கை யாதென்பதையும்;

(iii) உயர் கல்விக்காக வெளிநாடுகளுக்குச் செல்லும் மாணவர்களின் எண்ணிக்கையுடன், கடந்த ஐந்து வருடங்களில் வெளிநாட்டுப் பல்கலைக்கழகங்களில் கல்விகற்கும் மாணவர்களுக்காக மதிப்பிடப்பட்ட வருடாந்தச் செலவினை இலங்கை ரூபா மற்றும் ஐக்கிய அமெரிக்க டொலர்களில் யாதென்பதை வெவ்வேறாகவும்;

(iv) கடந்த ஐந்து வருடங்களில் கல்விக்கான மொத்த ஒதுக்கீட்டுத் தொகை மற்றும் மொத்த உள்நாட்டு உற்பத்தியில் அதன் சதவீதம் யாதென்பதை வெவ்வேறாகவும்;

அவர் இச்சபைக்கு மேலும் அறிவிப்பாரா?

(இ) இன்றேல், ஏன்?

---

## 2025 மார்ச் 15, சனிக்கிழமை

# வாய்மூல விடைக்கான வினாக்கள்

255/2024

கௌரவ (டாக்டர்) நிஷாந்த சமரவீர,— கமத்தொழில், கால்நடை வளங்கள், காணி மற்றும் நீர்ப்பாசன அமைச்சரைக் கேட்பதற்கு,— (2)

(அ) (i) காலி மாவட்டத்தில் நுகதூவ, "வலஹன்தூவ வத்தை" காணியை துண்டாக்கி பல்வேறு கருத்திட்டங்களுக்காக வழங்குவதற்கு திட்டமிடப்பட்டிருந்ததை அறிவாரா என்பதையும்;

(ii) மேற்படி கருத்திட்டங்களின் தற்போதைய நிலைமை யாதென்பதையும்;

(iii) மேற்படி கருத்திட்டங்களுக்காக இதுவரையில் செலவிடப்பட்டுள்ள தொகை எவ்வளவு என்பதையும்;

(iv) ஒவ்வொரு கருத்திட்டத்திற்குமான தேவை மற்றும் எதிர்ப்பார்க்கப்படும் நன்மைகள் இனங்காணப்பட்டுள்ளனவா என்பதையும்;

(v) அதன்படி, அத்தியாவசியமான கருத்திட்டங்கள் யாவை என்பதையும்;

(vi) அவற்றுள் சில கருத்திட்டங்கள் இன்றளவில் இடைநடுவில் நிறுத்தப் பட்டிருப்பின், அவற்றை மீள ஆரம்பிக்க முடியுமா என்பதையும்;

(vii) இன்றேல், மேற்படி கருத்திட்டங்களால் ஏற்க நேரிடும் நட்டம் எவ்வளவு என்பதையும்;

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஆ) இன்றேல், ஏன்?

275/2024

கௌரவ எஸ். எம். மரிக்கார்,— போக்குவரத்து, நெடுஞ்சாலைகள், துறைமுகங்கள் மற்றும் சிவில் விமான சேவைகள் அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) ஐ. டீ. எச் தொடக்கம் கொலன்னாவை சந்தி வரையிலான வீதியை அபிவிருத்தி செய்வதற்கான வேலைத்திட்டமொன்று முன்மொழியப்பட்டுள்ளதா என்பதையும்;

(ii) ஆமெனில், மேற்படி வேலைத்திட்டத்தை நடைமுறைப்படுத்துவதற்கு எதிர்பார்க்கும் காலப்பகுதி யாதென்பதையும்;

(iii) மேற்படி வீதியை அபிவிருத்தி செய்வதற்கான நிதி எவ்வாறு பெறப்படும் என்பதையும்;

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஆ) இன்றேல், ஏன்?

382/2025

கௌரவ ரோஹித்த அபேகுணவர்தன,— கிராமிய அபிவிருத்தி, சமூகப் பாதுகாப்பு மற்றும் சமூக வலுவூட்டுகை அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) இன்றளவில் பணிபுரிகின்ற சமுர்த்தி அபிவிருத்தி அலுவலர்களின் எண்ணிக்கை மற்றும் அந்தப் பதவியில் தற்போது காணப்படும் வெற்றிடங்களின் எண்ணிக்கை வெவ்வேறாக யாதென்பதையும்;

(ii) அத்தகைய வெற்றிடங்களுக்கு புதிய அலுவலர்கள் நியமிக்கப்படுவார்களா என்பதையும்;

(iii) இன்றளவில் பணிபுரிகின்ற சமுர்த்தி முகாமையாளர்களின் எண்ணிக்கை மற்றும் கடமை நிறைவேற்று சமுர்த்தி முகாமையாளர்களின் எண்ணிக்கை வெவ்வேறாக யாதென்பதையும்;

(iv) தற்போது ஓய்வு பெற்றுள்ள சமுர்த்தி அபிவிருத்தி அலுவலர்களினதும் சமுர்த்தி முகாமையாளர்களினதும் எண்ணிக்கை வெவ்வேறாக யாதென்பதையும்;

(v) இவர்களுக்கு ஓய்வூதியம் வழங்கப்படுகிறதா என்பதையும்;

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஆ) (i) சமுர்த்தி அபிவிருத்தி அலுவலர்களினதும் சமுர்த்தி முகாமையாளர்களினதும் பணிப்பொறுப்பு சமமானதா என்பதையும்;

(ii) சமுர்த்தி அபிவிருத்தி அலுவலர்களுக்கும் சமுர்த்தி முகாமையாளர்களுக்கும் பதவி உயர்வு வழங்குவதற்கான வழிமுறை காணப்படுகிறதா என்பதையும்;

(iii) ஆமெனில், அவ்வழிமுறை வெவ்வேறாக யாதென்பதையும்;

என்பதையும் அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(இ) (i) இதுவரை தாபிக்கப்பட்டுள்ள சமுர்த்தி வங்கிகளின் எண்ணிக்கை எவ்வளவென்பதையும்;

(ii) சமுர்த்தி இயக்கம் தொடர்பில் திட்டமிடப்பட்டுள்ள வேலைத்திட்டங்கள் யாவையென்பதையும்;

என்பதை அவர் மேலும் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஈ) இன்றேல், ஏன்?

429/2025

கௌரவ இம்ரான் மகரூப்,— பொது நிர்வாக, மாகாண சபைகள் மற்றும் உள்ளூராட்சி அமைச்சரைப் கேட்பதற்கு,— (1)

(அ) (i) திருகோணமலை மாவட்டத்தில், மூதூர் பிரதேச செயலகப் பிரிவுக்கு உட்பட்ட தோப்பூர் உப பிரதேச செயலகப் பிரிவு தாபிக்கப்பட்டு பல வருடங்கள் கடந்துள்ள போதிலும், இதுவரை தோப்பூர் உப பிரதேச செயலகப் பிரிவு தனியானதொரு பிரதேச செயலகப் பிரிவாக நிறுவப்படவில்லை என்பதையும்;

(ii) கிண்ணியா பிரதேச சபை ஆளுகைப் பிரதேசத்தை தனியானதொரு பிரதேச செயலகப் பிரிவாக நிறுவுவதற்கான பிரேரணையை உள்ளூராட்சி ஆணைக்குழு அங்கீகரித்துள்ளபோதிலும், இப்பிரேரணையானது இதுவரையில் நடைமுறைப்படுத்தப்படவில்லை என்பதையும்;

அவர் அறிவாரா?

(ஆ) தோப்பூர் உப பிரதேச செயலகப் பிரிவை தனியானதொரு பிரதேச செயலகப் பிரிவாகவும், கிண்ணியா பிரதேச சபை ஆளுகைப் பிரதேசத்தை தனியானதொரு பிரதேச செயலகப் பிரிவாகவும் நிறுவுவதில் காணப்படும் தடைகள் வெவ்வேறாக யாவை என்பதை அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(இ) (i) திருகோணமலை மாவட்டத்தின் சில கிராம உத்தியோகத்தர் பிரிவுகளில் 1000 இற்கும் மேற்பட்ட குடும்பங்கள் வசிக்கின்ற அதேவேளை சில கிராம உத்தியோகத்தர் பிரிவுகளில் 100 குடும்பங்கள் மாத்திரமே வாழ்கின்றார்கள் என்பதை அறிவாரா;

(ii) ஆமெனில், இந்த சமநிலையற்ற நிலைமையை சீர்செய்வதற்கான நடவடிக்கைகளை மேற்கொள்வாரா;

என்பதை அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(இ) இன்றேல், ஏன்?

437/2025

கௌரவ தினிந்து சமன்,— வலுசக்தி அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) பதுளை மற்றும் மொனராகலை முதலிய இரண்டு மாவட்டங்களின் எல்லைப் பிரதேசங்களிலுள்ள சிங்களயாகம, உனகந்த மற்றும் அன்னாசிகல ஆகிய கிராமங்களை உள்ளடக்கும் வகையில் அமுலாக்கப்பட்டுவரும் மின்சார கருத்திட்டத்திற்கான கோரிக்கையை முன்வைத்தவர் யாரென்பதையும்;

(ii) மேற்படி கருத்திட்டத்திற்கு அங்கீகாரம் வழங்கியவர் யாரென்பதையும்;

(iii) மேற்படி அனுமதி பெற்றுக்கொடுக்கப்பட்ட நடைமுறை யாதென்பதையும்;

(iv) மேற்படி கருத்திட்டத்திற்கு செலவிடப்பட்ட தொகை எவ்வளவென்பதையும்;

(v) மேற்படி கருத்திட்டத்தை அமுலாக்கும்போது, வனப்பாதுகாப்புத் திணைக்களம், சம்பந்தப்பட்ட நிரல் அமைச்சு மற்றும் சம்பந்தப்பட்ட பிற நிறுவனங்களின் முறையான அனுமதி பெற்றுக்கொள்ளப்பட்டுள்ளதா என்பதையும்;

(vi) ஆமெனில், அனுமதி பெற்றுக்கொள்ளப்பட்ட திகதி வெவ்வேறாக யாவை என்பதையும்;

(vii) இவற்றுடன் தொடர்புடைய ஆவணங்களின் பிரதிகளை சமர்ப்பிப்பாரா என்பதையும்;

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஆ) இன்றேல், ஏன்?

## 2025 மார்ச் 17, திங்கட்கிழமை

# வாய்மூல விடைக்கான வினாக்கள்

483/2025

கௌரவ (கலாநிதி) எம்.எல்.ஏ.எம். ஹிஸ்புல்லா,— புத்தசாசன, சமய மற்றும் கலாசார அலுவல்கள் அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) முஸ்லிம் சமய பண்பாட்டு அலுவல்கள் திணைக்களத்தின் கீழ் பதிவு செய்யப்பட்டுள்ள முஸ்லிம் பள்ளிவாசல்களில் இமாம் மற்றும் முஅத்தின் ஆகிய பதவிகள் உள்ளதென அறிவாரா என்பதையும்;

(ii) இதுவரையிலும் மேற்குறிப்பிட்ட பதவிகளில் சேவையாற்றும் பணியாளர் களுக்கு செலுத்த வேண்டிய ஆகக் குறைந்த சம்பளம் தொடர்பான எவ்விதக் குறிப்பும் இல்லையென்பதை அறிவாரா என்பதையும்;

(iii) ஆமெனில், இமாம் மற்றும் முஅத்தின் பதவிகளில் சேவையாற்றும் பணியார்களுக்கு செலுத்த வேண்டிய ஆகக் குறைந்த சம்பளம் தொடர்பாக தீர்மானமொன்றை மேற்கொண்டு, சகல பள்ளிவாசல்களிலும் சம அளவான சம்பளம் செலுத்தப்பட வேண்டுமென்ற தீர்மானம் மேற்கொள்ளப்படுமா என்பதையும்;

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஆ) இன்றேல், ஏன்?

493/2025

கௌரவ பத்மசிறி பண்டார,— சுகாதாரம் மற்றும் வெகுசன ஊடக அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) இலங்கையிலுள்ள ஆயுர்வேத வைத்தியசாலைகளின் எண்ணிக்கை யாதென்பதையும்;

(ii) சுதேச மருத்துவப் பல்கலைக்கழகங்களில் பட்டப்படிப்பை பூர்த்தி செய்துள்ளவர்களின் எண்ணிக்கை யாதென்பதையும்;

(iii) இன்றளவில் சுதேச ஆயுர்வேத வைத்தியசாலைகளில் ஆயுர்வேத மருத்துவர்களின் பற்றாக்குறை காணப்படுவதை அறிவாரா என்பதையும்;

(iv) அவ்வாறாயின், அது தொடர்பில் மேற்கொள்ளப்படும் நடவடிக்கைகள் யாவை என்பதையும்;

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஆ) (i) மின்னேரிய ஆயுர்வேத வைத்தியசாலையில் இயன்முறை மருத்துவ அலகொன்று இயங்குவதை அறிவாரா என்பதையும்;

(ii) மேற்படி அலகை நிர்மாணிக்கும் ஒப்பந்த வேலையை மேற்கொண்டது யாரென்பதையும்;

(iii) மேற்படி ஒப்பந்தத்தில் மோசடி இடம்பெற்றுள்ளதை அறிவாரா என்பதையும்;

(iv) அவ்வாறாயின், அது பற்றிய விசாரணை மேற்கொள்ளப்பட்டதா என்பதையும்;

(v) மேற்படி விசாரணையின் தற்போதைய முன்னேற்றம் யாதென்பதையும்;

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(இ) இன்றேல், ஏன்?

494/2025

கௌரவ ருவன் மாபலகம,— பிரதம அமைச்சர் மற்றும் கல்வி, உயர் கல்வி மற்றும் தொழிற்கல்வி அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) இலங்கையின் முதலாவது பாராளுமன்றம் தொடக்கம் இன்று வரையிலான ஒவ்வொரு பாராளுமன்றத்திலும் இருந்துள்ள அமைச்சர்கள், இராஜாங்க அமைச்சர்கள் மற்றும் பிரதி அமைச்சர்களின் எண்ணிக்கை வெவ்வேறாக யாது;

(ii) மேற்படி ஒவ்வொரு அமைச்சருக்குமான பணியாட்டொகுதி உறுப்பினர்களின் எண்ணிக்கை, வழங்கப்பட்டிருந்த வாகனங்களின் எண்ணிக்கை மற்றும் செலுத்தப்பட்ட ஏனைய கொடுப்பனவுகள் ஆகியன வெவ்வேறாக யாவை;

(iii) ஒன்பதாவது பாராளுமன்றத்தின் கௌரவ சபாநாயகரது பணியாட்டொகுதி உறுப்பினர்களின் எண்ணிக்கை யாது;

(iv) இவர்களின் பெயர்கள் யாவை;

என்பதை அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஆ) இன்றேல், ஏன்?

504/2025

கௌரவ நிஷாந்த பெரேரா,— பெருந்தோட்ட மற்றும் சமூக உட்கட்டமைப்பு வசதிகள் அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) தே சக்தி நிதியம் தாபிக்கப்பட்ட வருடம் யாது;

(ii) மேற்படி நிதியத்தின் அங்கத்தவர்களின் எண்ணிக்கை யாது;

(iii) மேற்படி நிதியத்தில் தற்போது காணப்படும் நிதியின் அளவு யாது;

(iv) மேற்படி நிதியைப் பயன்படுத்தி எதிர்காலத்தில் நடைமுறைப்படுத்துவதற்கு திட்டமிடப்பட்டுள்ள வேலைத்திட்டங்கள் யாவை;

என்பதை அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஆ) இன்றேல், ஏன்?

510/2025

கௌரவ மேஜர் ஜெனரல் (ஓய்வுபெற்ற) ஜீ.டி.சூரியபண்டார,— நிதி, திட்டமிடல் மற்றும் பொருளாதார அபிவிருத்தி அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) சணச அபிவிருத்தி வங்கி, இலங்கை மத்திய வங்கியின் ஒழுங்குறுத்தலுக்கு உட்பட்டதா;

(ii) சணச வங்கி மூலம் ஓய்வுபெற்ற இராணுவ உத்தியோகத்தர்களுக்கு “உத்தமாசார” என்ற பெயரில் கடன் திட்டமொன்று அறிமுகம் செய்யப்பட்டுள்ளதா;

(iii) அதன் கீழ் இதுவரை கடன் வழங்கப்பட்டுள்ள ஆட்களின் எண்ணிக்கை மற்றும் மொத்தக் கடன் தொகை யாது;

(iv) 2020 ஆம் ஆண்டு முதல் 2024 ஆம் ஆண்டு வரை கடன் வழங்கப்பட்டுள்ள ஆட்களின் எண்ணிக்கை மற்றும் மொத்தக் கடன் தொகை யாது;

(v) கடன் வழங்கும் போது கவனத்தில் கொள்ளப்படுகின்ற ஓய்வூதிய வீதம் யாது;

(vi) கடனை மீளச் செலுத்துவதற்கான குறைந்தபட்ச மற்றும் உச்சளவான காலஎல்லை யாது;

என்பதை அவர் தெரிவிப்பாரா?

(ஆ) (i) கொவிட்-19 தொற்றுக் காலத்தில் கடனை அறவிட்டுக் கொள்ளும் காலஎல்லை நீடிக்கப்பட்டதன் மூலம் கடன் தொகையை விடவும் கூடுதலான தொகையை வட்டியாக செலுத்த வேண்டிய நிலை ஏற்பட்டுள்ளது என்பதை அவர் அறிவாரா;

(ii) மேற்படி கால நீடிப்பு வங்கியின் தற்றுணிவின் பேரில் மேற்கொள்ளப்பட்டுள்ளது என்பதை அவர் அறிவாரா;

(iii) வங்கியின் தற்றுணிவின் பேரில் அவ்வாறு நீடிப்புச் செய்யப்பட முடியுமா;

(iv) அதன் மூலம் பாதிக்கப்பட்டுள்ள ஆட்களுக்கு நியாயம் நிலைநாட்டப்படுமா;

என்பதையும் அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(இ) இன்றேல், ஏன்?

---

## 2025 மார்ச் 18, செவ்வாய்க்கிழமை

# வாய்மூல விடைக்கான வினாக்கள்

495/2025

கௌரவ சுசந்த குமார நவரத்ன,— கமத்தொழில், கால்நடை வளங்கள், காணி மற்றும் நீர்ப்பாசன அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) மிகிந்தலை கமநல சேவைகள் ஆளுகைப் பிரதேசத்தில், வரையறுக்கப்பட்ட ஜனதா லங்கா மிளகாய் சந்தைப்படுத்தல் கம்பனி நிறுவப்பட்டுள்ளமையை அறிவாரா என்பதையும்;

(ii) 2001 ஆம் ஆண்டில் மிகிந்தலை கமநல சேவைகள் வங்கியினால் மேற்படி கம்பனிக்கு ரூ.1,275,000/- கடன் தொகை வழங்கப்பட்டுள்ளதா என்பதையும்;

(iii) ஆமெனில், அக்கடன் தொகை வழங்கப்பட்ட அடிப்படை யாதென்பதையும்;

(iv) மேற்படி கடன் தொகை மீள அறவிடப்படுமா என்பதையும்;

(v) ஆமெனில், அறவிடப்படும் அடிப்படை யாதென்பதையும்;

(vi) மேற்படி கடன்தொகைக்காக அறவிடப்பட வேண்டிய ரூ. 1,975,233/- வட்டித் தொகையை அறவிடப்படாதிருப்பதற்கு தீர்மானிக்கப்பட்டுள்ளதா என்பதையும்;

(vii) ஆமெனில், அதற்கான காரணங்கள் யாவை என்பதையும்;

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஆ) இன்றேல், ஏன்?

496/2025

கௌரவ (பேராசிரியர்) சேன நாணாயக்கார,— சுகாதாரம் மற்றும் வெகுசன ஊடக அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) இன்றளவில் இலங்கையில் ஒளிபரப்பாகும் இலங்கைக்குரிய தொலைக்காட்சி அலைவரிசைகளின் எண்ணிக்கை எத்தனையென்பதையும்;

(ii) மேற்படி எண்ணிக்கை, அரச தொலைக்காட்சி அலைவரிசைகள் மற்றும் தனியார் தொலைக்காட்சி அலைவரிசைகள் எனும் அடிப்படையில் வெவ்வேறாக எத்தனை என்பதையும்;

(iii) அரச மற்றும் தனியார் தொலைக்காட்சி அலைவரிசைகள் வெவ்வேறாக யாதென்பதையும்;

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஆ) (i) வெகுசன ஊடகங்களுக்காக நெறிமுறைக் கோவையொன்று காணப்பட வேண்டுமென்பதை ஏற்றுக்கொள்கின்றாரா என்பதையும்;

(ii) மேற்படி நெறிமுறைக் கோவை இலங்கைக்குரிய தொலைக்காட்சி அலைவரிசைகளில் எவ்வாறான தாக்கத்தை செலுத்தும் என்பதையும்;

(iii) தொலைக்காட்சி அலைவரிசைகளில் இன்றளவில் ஒளிபரப்பாகும் நிகழ்ச்சிகள் தொடர்பாக எவ்வாறு கவனம் செலுத்தப்படுகின்றதென்பதையும்;

(iv) மேற்படி நிகழ்ச்சிகள் தொடர்பாக புலனாய்வு ரீதியான வேலைத்திட்டமொன்று நடைமுறைப்படுத்தப்படுமா என்பதையும்;

(v) ஆமெனில், அவ்வேலைத்திட்டம் எவ்வாறு நடைமுறைப்படுத்தப்படும் என்பதையும்;

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(இ) இன்றேல், ஏன்?

498/2025

கௌரவ அனுராத ஜயரத்ன,— கமத்தொழில், கால்நடை வளங்கள், காணி மற்றும் நீர்ப்பாசன அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) 2024 ஆம் ஆண்டில் வன விலங்குகளால் ஏற்படுத்தப்பட்ட பயிர்ச் சேதங்களின் அளவு யாதென்பதையும்;

(ii) அதன் காரணமாக ஏற்பட்ட பொருளாதார நட்டம் யாதென்பதையும்;

(iii) வன விலங்குகளால் ஏற்படுத்தப்படும் பயிர்ச் சேதங்களை குறைப்பதற்கு இன்றளவில் மேற்கொள்ளப்பட்டுள்ள நடவடிக்கைகள் யாவையென்பதையும்;

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஆ) (i) பயிர்ச் செய்கைகளைப் பாதுகாப்பதற்கு விவசாயிகளுக்கு வழங்கப்பட்டுள்ள துப்பாக்கிகளின் எண்ணிக்கை யாதென்பதையும்;

(ii) மேற்படி துப்பாக்கிகளுக்கு பயன்படுத்தப்படும் தோட்டா ஒன்றின் விலை ரூ.450/- ஆக காணப்படுவதை அறிவாரா என்பதையும்;

(iii) அதன் காரணமாக விவசாயிகள் கடும் சிரமங்களை எதிர்கொண்டுள்ளமையை அறிவாரா என்பதையும்;

(iv) ஆமெனில், அது தொடர்பாக மேற்கொள்ளப்படும் நடவடிக்கைகள் யாவையென்பதையும்;

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(இ) இன்றேல், ஏன்?

502/2025

கௌரவ நந்த பண்டார,— பிரதம அமைச்சர் மற்றும் கல்வி, உயர் கல்வி மற்றும் தொழிற் கல்வி அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) ஆசிரியர் மற்றும் அதிபர் சேவைகளில் சம்பள முரண்பாடு காணப்படுவதை ஏற்றுக்கொள்வாரா என்பதையும்;

(ii) அதனைத் தீர்ப்பதற்குள்ள வேலைத்திட்டம் யாதென்பதையும்;

(iii) ஆசிரியர் சேவை பிரமாணக் குறிப்பின் பிரகாரம், பதவி உயர்வுகளுக்கு மொடியுல் தேவைகள் பூர்த்தி செய்யப்பட வேண்டுமென்பதை அறிவாரா என்பதையும்;

(iv) மொடியுல் தேவைகளை பூர்த்தி செய்ய முடியாததால், பதவி உயர்வுகள் இழக்கப்படுதல், சம்பள ஏற்றங்கள் கிடைக்காமை மற்றும் சேவையை நிரந்தரமாக்குவதில் தாமதம் போன்ற பிரச்சனைகள் எழுந்துள்ளமையை அறிவாரா என்பதையும்;

(v) மேற்படி பிரச்சினைகளுக்கு தீர்வு காண்பதற்குள்ள வேலைத்திட்டம் யாதென்பதையும்;

(vi) அவற்றைத் தீர்ப்பதற்கான கால வரையறை யாதென்பதையும்;

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஆ) (i) சேவை பிரமாணக் குறிப்பின் பிரகாரம், மட்டுப்படுத்தப்பட்ட மற்றும் திறந்த ஆட்சேர்ப்பு நடவடிக்கைகள் இரண்டு கால வரையறைக்குள் மேற்கொள்ளப்பட்டதன் காரணமாக மூப்புரிமை தொடர்பான பிரச்சினைகள் எழுந்துள்ளமையை அறிவாரா என்பதையும்;

(ii) மேற்படி பிரச்சனைகளை தீர்ப்பதில் தடைகள் உள்ளதா என்பதையும்;

(iii) அந்தப் பிரச்சனைகளை தீர்ப்பதற்குள்ள வேலைத்திட்டம் யாதென்பதையும்;

என்பதையும் அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(இ) (i) கல்வி நிருவாகச் சேவை அலுவலர்களை பணியில் அமர்த்தும் நடவடிக்கை முறைப்படுத்தப்பட்டுள்ளதா என்பதையும்;

(ii) இன்றேல், அது தொடர்பாக காணப்படும் வேலைத்திட்டம் யாதென்பதையும்;

என்பதையும் அவர் மேலும் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஈ) இன்றேல், ஏன்?

505/2025

கௌரவ கிட்ணன் செல்வராஜ்,— பெருந்தோட்ட மற்றும் சமூக உட்கட்டமைப்பு வசதிகள் அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) பெருந்தோட்ட மக்களுக்கு சுத்தமான குடிநீர் கிடைப்பதில்லை என்பதை அறிவாரா;

(ii) 1992 ஆம் ஆண்டின் பின்னர் அரச மற்றும் பெருந்தோட்ட மனிதவள அபிவிருத்தி நிதியத்தினால் (TRUST) பதுளை மாவட்டத்திலுள்ள தோட்டங்களில் நடைமுறைப்படுத்தப்பட்ட குடிநீர் கருத்திட்டங்களின் எண்ணிக்கை எத்தனை;

(iii) மேற்படி ஒவ்வொரு கருத்திட்டத்திற்கும் செலவிடப்பட்ட பணத்தொகை மற்றும் தற்போதைய நிலைமை வெவ்வேறாக யாவை;

என்பதை அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஆ) (i) பதுளை மாவட்டத்தின், பூனாகல LLG, கெப்கடை புதிய குடியிருப்புத் திட்டத்தில் நடைமுறைப்படுத்தப்பட்ட நீர் கருத்திட்டம் முழுமையாக பூர்த்தி செய்யப்படவில்லை என்பதையும்;

(ii) மேற்படி கருத்திட்டத்திற்கு ஒதுக்கப்பட்ட நிதி எவ்வளவு;

(iii) இன்றளவில் இந்நிதி முழுமையாக விடுவிக்கப்பட்டுள்ளதா;

என்பதையும் அவர் இச்சபைக்குத் தெரிவிப்பாரா?

(இ) இன்றேல், ஏன்?

---

## 2025 மார்ச் 19, புதன்கிழமை

# வாய்மூல விடைக்கான வினாக்கள்

506/2025

கௌரவ மஞ்ஜுள சுரவீர ஆரச்சி,— பெருந்தோட்ட மற்றும் சமூக உட்கட்டமைப்பு வசதிகள் அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) சௌமியமூர்த்தி தொண்டமான் ஞாபகார்த்த மன்றமானது பாராளுமன்ற சட்டத்தினால் கூட்டிணைக்கப்பட்ட நிறுவனமா;

(ii) அதன் பணியாட்டொகுதி உறுப்பினர்களின் எண்ணிக்கை யாது;

(iii) மேற்படி மன்றத்திற்கு சொந்தமான சொத்துக்கள் யாவை;

(iv) 2020 ஆம் ஆண்டு முதல் 2024 ஆம் ஆண்டு வரை மேற்படி மன்றத்திற்கு வரவு செலவுத்திட்டத்தின் மூலம் ஒதுக்கப்பட்ட தொகை ஆண்டுவாரியாக வெவ்வேறாக எவ்வளவு;

(v) மேற்படி காலப்பகுதிக்குள் மேற்படி மன்றம் கணக்காய்வுக்கு உட்படுத்தப்பட்டுள்ளதா;

என்பதை அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஆ) இன்றேல், ஏன்?

507/2025

கௌரவ தினேஷ் ஹேமந்த,— சுற்றாடல் அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) இலங்கையிலுள்ள யானை தடுப்பு மின்சார வேலிகளை பாதுகாப்பதற்காக சேர்த்துக்கொள்ளப்பட்டுள்ள யானை தடுப்பு வேலி பயிலுனர் உதவியாளர்களின் எண்ணிக்கை எத்தனை;

(ii) இவர்களில் தற்போது சேவையில் நிரந்தரமாக்கப்பட்டுள்ள யானை தடுப்பு வேலி பயிலுனர் உதவியாளர்களின் எண்ணிக்கை எத்தனை;

(iii) இன்றளவில் சேவையில் நிரந்தரமாக்கப்படாத யானை தடுப்பு வேலி பயிலுனர் உதவியாளர்களை சேவையில் நிரந்தரமாக்குவதற்கு சட்டரீதியான தடைகள் காணப்படுகின்றனவா;

(iv) இன்றேல், இவர்கள் நிரந்தரமாக்கப்படாமைக்கான காரணங்கள் யாவை;

(v) சேவையில் நிரந்தரமாக்கப்படாத யானை தடுப்பு வேலி பயிலுனர் உதவியாளர்களை நிரந்தரமாக்குவதற்கு திட்டவட்டமானதொரு வேலைத்திட்டம் காணப்படுகின்றதா;

(vi) ஆமெனின், அவ்வேலைத்திட்டம் யாது;

என்பதை அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஆ) இன்றேல், ஏன்?

511/2025

கௌரவ சுஜீவ திசாநாயக்க,— இளைஞர் விவகாரங்கள் மற்றும் விளையாட்டுத்துறை அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) இலங்கையிலுள்ள அரச விளையாட்டுக் கட்டிடத் தொகுதிகளின் எண்ணிக்கை எத்தனை என்பதையும்;

(ii) குருநாகல் மாவட்டத்தில் அரச விளையாட்டுக் கட்டிடத் தொகுதியொன்று அமைக்கப்பட்டுள்ளதா என்பதையும்;

(iii) ஆமெனில், மேற்படி விளையாட்டுக் கட்டிடத் தொகுதி தாபிக்கப்பட்டுள்ள இடம் யாது;

(iv) மேற்படி விளையாட்டுக் கட்டிடத் தொகுதியை முதலில் நிர்மாணிக்க உத்தேசிக்கப்பட்டிருந்த இடம் யாது;

(v) இதனை வேறொரு இடத்தில் நிர்மாணிக்க நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டதா;

(vi) ஆமெனில், அதற்கான காரணங்கள் யாவை;

என்பதை அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஆ) (i) மேற்படி விளையாட்டுக் கட்டிடத் தொகுதியில் அவற்றுக்கான வசதிகளை ஏற்பாடு செய்வதற்கு எதிர்பார்க்கப்பட்டிருந்த விளையாட்டுக்கள் யாவை;

(ii) மேற்படி விளையாட்டுக் கட்டிடத் தொகுதியில் இற்றைவரை வசதிகள் செய்துகொடுக்கப்பட்டுள்ள விளையாட்டுக்கள் யாவை;

(iii) மேற்படி விளையாட்டுக் கட்டிடத் தொகுதியை நிர்மாணிக்கவென மதிப்பீடு செய்யப்பட்டிருந்த தொகை யாது;

(iv) மேற்படி விளையாட்டுக் கட்டிடத் தொகுதியை பூரணமாக நிர்மாணிக்க நடவடிக்கை மேற்கொள்ளப்படுமா;

(v) ஆமெனில், அதன் நிர்மாணப் பணிகள் பூர்த்தி செய்யப்படும் திகதி யாது;

என்பதையும் அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(இ) இன்றேல், ஏன்?

514/2025

கௌரவ (டாக்டர்) நஜீத் இந்திக்க,— நீதி மற்றும் தேசிய ஒருமைப்பாட்டு அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) தற்போது தடுப்புக் காவலில் உள்ள அரசியல் கைதிகளின் எண்ணிக்கை யாது;

(ii) மேற்படி ஒவ்வொரு அரசியல் கைதியும் தடுத்து வைக்கப்பட்டுள்ள காலம், இவர்களுக்கு எதிராக உள்ள குற்றச்சாட்டுகள் மற்றும் தடுத்துவைப்பதற்காக பயன்படுத்தப்பட்டுள்ள சட்டம் வெவ்வேறாக யாது;

(iii) மேற்படி அரசியல் கைதிகளை விடுவிப்பதற்குள்ள திட்டம் யாது;

என்பதை அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஆ) இன்றேல், ஏன்?

517/2025

கௌரவ ஹர்ஷன ராஜகருணா,— பிரதம அமைச்சர் மற்றும் கல்வி, உயர் கல்வி மற்றும் தொழிற் கல்வி அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) 1000 தேசிய பாடசாலைகளை உருவாக்கும் வேலைத்திட்டத்தின் கீழ் இதுவரை தேசிய பாடசாலைகளாக அறிவிக்கப்பட்டுள்ள பாடசாலைகளின் எண்ணிக்கை ஒவ்வொரு பிரதேச செயலகப் பிரிவு வாரியாக வெவ்வேறாக யாதென்பதையும்;

(ii) அந்த ஒவ்வொரு தேசிய பாடசாலைக்கும் பெயர் பலகை மற்றும் பிரதான நுழைவாயிலை அமைப்பதற்கு வழங்கப்பட்டுள்ள தொகை வெவ்வேறாக யாதென்பதையும்;

(iii) தற்போது அந்தப் பாடசாலைகள் நிரல் அமைச்சின் மூலம் நிர்வகிக்கப்படுகிறதா இன்றேல், சம்பந்தப்பட்ட மாகாண சபையின் மூலம் நிர்வகிக்கப்படுகிறதா என்பதையும்;

(iv) அதன்படி, இதுவரை உருவாக்கப்பட்டுள்ள தேசிய பாடசாலைகளின் மொத்த எண்ணிக்கை யாது என்பதையும்;

(v) அவற்றின் பெயர்கள் யாவை என்பதையும்;

(vi) அந்தத் தேசிய பாடசாலைகளின் பௌதீக வளங்கள் அபிவிருத்தி செய்யப்பட்டு அவை நிரல் அமைச்சின் கீழ் கொண்டுவரப்படுமா என்பதையும்;

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஆ) இன்றேல், ஏன்?

---

## 2025 மார்ச் 20, வியாழக்கிழமை

## வாய்மூல விடைக்கான வினாக்கள்

4/2024

கௌரவ ஹேஷா விதானகே அங்கும்புர ஆரச்சி,— பொது நிர்வாக, மாகாண சபைகள் மற்றும் உள்ளூராட்சி அமைச்சரைக் கேட்பதற்கு,— (2)

(அ) (i) இலங்கையில் தற்பொழுதுள்ள அமைச்சுக்கள், திணைக்களங்கள், நியதிச் சட்ட சபைகள் உள்ளிட்ட மொத்த அரச நிறுவனங்களின் எண்ணிக்கை எத்தனை;

(ii) மேற்படி ஒவ்வொரு நிறுவனத்திலும் பாதுகாப்புச் சேவைகளை வழங்குகின்ற பாதுகாப்புக் கம்பனிகளின் பெயர்கள் யாவை;

(iii) அவற்றுள் அரச கம்பனிகளின் எண்ணிக்கை மற்றும் அவற்றின் பெயர்கள் யாவை;

(iv) 2015 ஆம் ஆண்டு தொடக்கம் இதுவரையில் மேற்படி ஒவ்வொரு அரச நிறுவனத்தினதும் பாதுகாப்புச் சேவைக்காக தனியார் பாதுகாப்புக் கம்பனிகளுக்கு செலுத்தப்பட்ட பணத்தொகை ஒவ்வொரு கம்பனியின் அடிப்படையில் வெவ்வேறாக எவ்வளவு;

என்பதை அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஆ) (i) அரச நிறுவனங்களுக்கு பாதுகாப்பை வழங்குவது தொடர்பான ஒப்பந்தங்களைப் பெறுகின்றபோது மோசடி நடவடிக்கைகள் இடம்பெறுகின்றது என்பதை அவர் அறிவாரா;

(ii) ஆமெனில், அரச நிறுவனங்களுக்கு பாதுகாப்புச் சேவை வழங்கும் செயற்பாட்டை அரசிற்குரிய பாதுகாப்புக் கம்பனிகளுக்கு வழங்குவதற்காக மேற்கொள்ளும் நடவடிக்கைகள் யாவை;

என்பதையும் அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(இ) இன்றேல், ஏன்?

63/2024

கௌரவ சமிந்த விஜேசிறி,— டிஜிட்டல் பொருளாதார அமைச்சரைக் கேட்பதற்கு,— (2)

(அ) (i) உலகில் அநேகமான நாடுகளில் பொருளாதார நடவடிக்கைகள் உள்ளிட்ட பல்வேறு நடவடிக்கைகளுக்கு இன்றளவில் டிஜிட்டல் தொழில்நுட்பம் பயன்படுத்தப்படுகின்றதென்பதை அறிவாரா என்பதையும்;

(ii) இலங்கையில் அரச நிறுவனங்களில் இடம்பெறும் பல்வேறு ஊழல் மற்றும் மோசடிகளை தடுப்பதற்கு அந்த நிறுவனங்களை டிஜிட்டல் மயப்படுத்துவதற்கு மேற்கொள்ளப்படும் நடவடிக்கைகள் யாவையென்பதையும்;

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஆ) இன்றேல், ஏன்?

75/2024

கௌரவ சாணக்கியன் ராஜபுத்திரன் இராசமாணிக்கம்,— நகர அபிவிருத்தி, நிர்மாணிப்பு மற்றும் வீடமைப்பு அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) மட்டக்களப்பு மாவட்டத்தின் மண்முனை மேற்கு வவுணதீவு பிரதேச செயலாளர் பிரிவிலுள்ள பனையறுப்பான், பன்சேனை வாதக்கல்மடு, பாவற்கொடிசேனை, உன்னிச்சை, நெடியமடு ஆகிய பிரதேசங்களுக்கு இற்றைவரை குடிநீர் வசதிகள் வழங்கப்படவில்லை என்பதை அவர் அறிவாரா என்பதையும்;

(ii) உன்னிச்சையிலிருந்து வேறு பல பிரதேசங்களுக்கு குடிநீர் விநியோகிக்கப்பட்ட போதிலும் இற்றைவரை உன்னிச்சை பிரதேச மக்களுக்கு குடிநீர் கிடைக்கவில்லை என்பதை அவர் அறிவாரா என்பதையும்;

(iii) மேற்படி பிரதேசங்களுக்கு குடிநீர் வசதிகளை வழங்குவதற்குத் தேவையான நடவடிக்கை மேற்கொள்ளப்படுமா என்பதையும்;

(iv) ஆமெனில், இப்பிரதேசங்களுக்கு குடிநீர் வசதிகள் வழங்கப்படவுள்ள காலப்பகுதி யாதென்பதையும்;

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஆ) இன்றேல், ஏன்?

211//2024

கௌரவ ரோஹண பண்டார,— புத்தசாசன, சமய மற்றும் கலாசார அலுவல்கள் அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) தொல்பொருளியல் திணைக்களத்திற்கு அங்கீகரிக்கப்பட்டுள்ள ஊழியர்களின் எண்ணிக்கை மற்றும் தற்போது காணப்படுகின்ற வெற்றிடங்களின் எண்ணிக்கை ஆகியன ஒவ்வொரு பதவிக்கும் ஏற்ப வெவ்வேறாக எத்தனை;

(ii) மேற்படி வெற்றிடங்களை நிரப்புவதற்கு எடுக்கப்படும் நடவடிக்கைகள் யாவை;

(iii) தொல்பொருளியல் திணைக்களத்திற்கு தேவையான வளங்களை பெற்றுக்கொடுப்பதற்கு எடுக்கப்படும் நடவடிக்கைகள் யாவை;

என்பதை அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஆ) இன்றேல், ஏன்?

393/2025

கௌரவ சாமர சம்பத் தசநாயக்க,— பிரதம அமைச்சர் மற்றும் கல்வி, உயர் கல்வி மற்றும் தொழிற் கல்வி அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) சனாதிபதி நிதியத்தின் அலுவலகம் "லேக்ஹவுஸ்" கட்டிடத்தின் 3வது மாடியில் அமைந்துள்ளது என்பதை அறிவாரா என்பதையும்;

(ii) தற்போது இந்த அலுவலகம் மேற்குறிப்பிட்ட கட்டிடத்திலிருந்து அகற்றப்பட்டு பிறிதொரு கட்டிடத்தில் தாபிக்கப்பட்டுள்ளதா என்பதையும்;

(iii) ஆமெனில், இந்த அலுவலகம் தாபிக்கப்பட்டிருப்பது அரசாங்க கட்டிடத்திலா இன்றேல் தனியார் கட்டிடத்திலா என்பதையும்;

(iv) மேற்படி அலுவலகத்தை முன்பிருந்த இடத்தில் பேணிவருவதற்கு செலவிடப்பட்டுள்ள மாதாந்த செலவு யாதென்பதையும்;

(v) இந்த அலுவலகத்தை தற்போது தாபித்துள்ள இடத்தில் செயற்படுத்துவதற்கான வாடகை மற்றும் ஏனைய வசதிகளுக்காக செய்யப்படும் மாதாந்த செலவு யாதென்பதையும்;

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஆ) இன்றேல், ஏன்?

---

## 2025 மார்ச் 21, வெள்ளிக்கிழமை

## வாய்மூல விடைக்கான வினாக்கள்

127/2024

கௌரவ சட்டத்தரணி தயாசிறி ஜயசேகர,— பிரதம அமைச்சர் மற்றும் கல்வி, உயர் கல்வி மற்றும் தொழிற் கல்வி அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) 2024 ஆம் ஆண்டு நடைபெற்ற சனாதிபதித் தேர்தலுக்கு பின்னர் இதுவரையில் அச்சிடப்பட்டுள்ள நாணயத் தாள்கள் மற்றும் வார்க்கப்பட்டுள்ள நாணயக் குற்றிகளின் பெறுமதி இலங்கை ரூபாவில் எவ்வளவு என்பதையும்;

(ii) மேற்படி நாணயத் தாள்கள் மற்றும் நாணயக் குற்றிகள் அச்சிடப்பட்ட சந்தர்ப்பங்களின் எண்ணிக்கை எத்தனை என்பதையும்;

(iii) அச்சிடப்பட்ட நாணயத் தாள்கள் மற்றும் வார்க்கப்பட்ட நாணயக் குற்றிகளின் வகைகள் மற்றும் அவ் ஒவ்வொரு நாணயத் தாள் மற்றும் நாணயக் குற்றி வகைகளில் அச்சிடப்பட்ட பெறுமதி வெவ்வேறாக எவ்வளவு என்பதையும்;

(iv) அவ்வாறு அச்சிடப்படுவதற்கான காரணங்கள் யாவை என்பதையும்;

(v) மேற்படி நாணயத் தாள்கள் மற்றும் நாணயக் குற்றிகளை அச்சிடுவதற்கான அங்கீகாரம் யாரால் வழங்கப்பட்டது என்பதையும்;

(vi) மேற்படி நாணயத் தாள்கள் மற்றும் நாணயக் குற்றிகள் உபயோகிக்கப்பட்ட நோக்கங்கள் யாவை என்பதையும்;

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஆ) (i) எதிர்காலத்தில் நாணயத் தாள்கள் மற்றும் நாணயக் குற்றிகளை அச்சிட எதிர்பார்க்கப்படுகின்றதா என்பதையும்;

(ii) ஆமெனில், அந்த நாணயத் தாள்கள் மற்றும் நாணயக் குற்றிகளின் பெறுமதி எவ்வளவு என்பதையும்;

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(இ) இன்றேல், ஏன்?

191/2024

கௌரவ நலின் பண்டார ஜயமஹ,— கைத்தொழில் மற்றும் தொழில் முயற்சியாண்மை அபிவிருத்தி அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) இலங்கையில் உள்ள அரசாங்கத்திற்குச் சொந்தமான சீனி உற்பத்தி நிறுவனங்களின் எண்ணிக்கை எத்தனை என்பதையும்;

(ii) அவற்றின் பெயர்கள் யாவை என்பதையும்;

(iii) 2022 ஆம் ஆண்டு தொடக்கம் இதுவரையில் இலங்கைக்கு இறக்குமதி செய்யப்பட்ட சீனியின் அளவு மற்றும் அதற்காக செலவிடப்பட்ட மொத்தத் தொகை ஆண்டுவாரியாக வெவ்வோறாக எவ்வளவென்பதையும்;

(iv) அரசாங்கத்திற்குச் சொந்தமான சீனி உற்பத்தி தொழிற்சாலைகளில் தற்போது விற்பனை செய்ய முடியாத நிலையில் தேங்கிக் கிடக்கும் சீனி மற்றும் எதனோலின் அளவு வெவ்வேறாக எவ்வளவென்பதையும்;

(v) இலங்கையில் சீனி உற்பத்தியை அதிகரிப்பதற்காக எடுக்கப்படும் நடவடிக்கைகள் யாவை என்பதையும்;

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஆ) இன்றேல், ஏன்?

221/2024

கௌரவ அஜித் பி. பெரேரா,— நீதி மற்றும் தேசிய ஒருமைப்பாட்டு அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) "பாதுகாப்பான முறையில் கர்ப்பத்தை கலைத்தல்" தொடர்பாக 2012 ஆம் ஆண்டு இலங்கையின் சட்ட ஆணைக்குழுவினால் சமர்ப்பிக்கப்பட்ட முன்மொழிவுகளை நடைமுறைப்படுத்துவதற்கு, "வளமான நாடு-அழகான வாழ்க்கை" என்ற கொள்கை பிரகடனத்தினூடாக முன்வைக்கப்பட்ட வாக்குறுதியை நிறைவேற்றுவதற்கு இன்றளவில் மேற்கொள்ளப்பட்டுள்ள நடவடிக்கைகள் யாவையென்பதையும்;

(ii) அது தொடர்பான புதிய சட்டங்களை துரிதமாக இயற்றுவதற்கான நடவடிக்கையில் தாமதம் ஏற்படுவதற்கான காரணங்கள் யாவையென்பதையும்;

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஆ) இன்றேல், ஏன்?

294/2024

கௌரவ சட்டத்தரணி ரஊப் ஹகீம்,— கமத்தொழில், கால்நடை வளங்கள், காணி மற்றும் நீர்ப்பாசன அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) தொடர்ச்சியாக வெள்ளப் பெருக்கு இடர்வரவு காணப்படுகின்ற ஆறுகள் மற்றும் ஓடைகள் யாவையென்பதையும்;

(ii) அவற்றின் வெள்ளத்தைக் கட்டுப்படுத்துவதற்காக இன்றளவில் செயற்படுத்தப்பட்டுள்ள உள்நாட்டு மற்றும் வெளிநாட்டுக் கருத்திட்டங்கள் யாவையென்பதையும்;

(iii) அத்தகைய கருத்திட்டங்களுக்காக பயன்படுத்தப்பட்டுள்ள உள்நாட்டு மற்றும் வெளிநாட்டு நிதியளவு வெவ்வேறாக யாதென்பதையும்;

(iv) மேற்படி கருத்திட்டங்களுக்காக நிதி வழங்கிய நிறுவனங்கள் யாவையென்பதையும்;

(v) மேற்படி கருத்திட்டங்களில் பல்வேறு தடைகள் காரணமாகத் தோல்வியடைந்த கருத்திட்டங்கள் உள்ளனவா என்பதையும்;

(vi) ஆமெனில், அக்கருத்திட்டங்கள் யாவையென்பதையும்;

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஆ) இன்றேல், ஏன்?

305/2024

கௌரவ ரவி கருணாநாயக்க,— பிரதம அமைச்சர் மற்றும் கல்வி, உயர் கல்வி மற்றும் தொழிற் கல்வி அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) இலங்கையிலுள்ள அரசாங்கத்திற்குச் சொந்தமான பல்கலைக்கழகங்களின் எண்ணிக்கை யாதென்பதையும்;

(ii) ஒவ்வொரு பல்கலைக்கழகத்திலும் உள்ள பீடங்களின் எண்ணிக்கை மற்றும் ஒவ்வொரு பீடத்திலும் உள்ள மாணவர்களின் எண்ணிக்கை யாதென்பதை வெவ்வேறாகவும்;

(iii) அரசாங்கப் பல்கலைக்கழக மாணவர் ஒருவருக்கான வருடாந்த சராசரிச் செலவு மற்றும் துறைவாரியாக வகைப்படுத்தப்பட்ட பட்டப்படிப்பு ஒன்றை பூர்த்திசெய்வதற்கான மொத்தச் செலவு யாதென்பதை வெவ்வேறாகவும்;

(iv) இலங்கையிலுள்ள தனியார் பல்கலைக்கழகங்களின் எண்ணிக்கை யாதென்பதையும்;

(v) ஒவ்வொரு தனியார் பல்கலைக்கழகத்திலும் பதிவுசெய்யப்பட்ட மாணவர்களின் எண்ணிக்கை யாதென்பதை வெவ்வேறாகவும்;

(vi) தனியார் பல்கலைக்கழக மாணவர் ஒருவருக்கான மொத்தச் செலவு மற்றும் துறைவாரியாக வகைப்படுத்தப்பட்ட பட்டப்படிப்பு ஒன்றினை பூர்த்திசெய்வதற்கான மொத்தச் செலவு யாதென்பதை வெவ்வேறாகவும்;

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஆ) (i) ஒவ்வொரு அரசாங்கப் பல்கலைக்கழகத்திலும் உள்ள பேராசிரியர்களின் எண்ணிக்கை மற்றும் மொத்தப் பேராசிரியர்களின் எண்ணிக்கை யாதென்பதையும்;

(ii) ஒவ்வொரு அரசாங்கப் பல்கலைக்கழகத்தையும் நடாத்துவதற்கான மொத்தச் செலவு யாதென்பதையும்;

(iii) மேலே குறிப்பிடப்பட்ட பல்கலைக்கழகங்கள் ஒவ்வொன்றிலும் உள்ள மாணவர் ஒருவருக்கான மொத்தச் செலவு யாதென்பதையும்;

(iv) ஒவ்வொரு அரசாங்கப் பல்கலைக்கழகத்தினதும் சொத்துக்களின் மொத்தப் பெறுமதி யாதென்பதையும்;

(v) மேலே குறிப்பிடப்பட்ட பல்கலைக்கழகங்கள் ஒவ்வொன்றினதும் உலகத் தரவரிசைப்படுத்தல் யாதென்பதையும்?

அவர் இச்சபைக்கு மேலும் வெவ்வேறாக அறிவிப்பாரா?

(இ) இன்றேல், ஏன்?